பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 216

செவ்வாய்க்கிழமை
30 ஜூன் 2026

ஆனி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

## குறைக்கப்பட்டது எரிபொருள் விலை

யாழ்ப்பாணம், ஜூன் 30
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள்கள் சிலவற்றின் விலையைக் குறைத்துள்ளது.
இதற்கமைய, 92 ஒக்ரேன் பெற்றோல் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 414 ரூபாவும், லங்கா ஒட்டோ டீசல் »11




# ஆளுநருக்கு எதிராக வவுனியாவில் போர்!

**வவுனியா, ஜூன் 30**

**வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன் வடமாகாண ஆளுநரால் பதவி நீக்கப்பட்டதைக் கண்டித்து, வவுனியாவில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.** »11



## விகாரையை அகற்றி காணியை வழங்குக!

### தையிட்டியில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
தையிட்டியில் பொதுமக்களின் காணிக்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றி, அந்தக் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்றும் »11

## யாழ். மறைமாவட்ட ஆயராக அன்ரன் ரஞ்சித் ஆண்டகை



யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றிய அருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஓய்வுபெற்றுச் சென்றதைத் »11

## பலவீனமான நிலையில் நாட்டின் உளவுத்துறை!

### நாமல் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 30
நாட்டின் உளவுத்துறை திட்டமிட்ட ரீதியில் பலவீனமான நிலைக்குக் கொண்டுசெல்லப் படுகின்றது. மக்களைப் பிரித்தாளவே இந்த நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்படுகின்றன - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திசைகாட்டி அரசாங்கத்தின் இயலாமைகள் ஒவ்வொன் »11

வலிகாமம் வடக்கு

## பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட வெளியேற்ற அறிவித்தல் முரணானது

யாழ்ப்பாணம், ஜூன் 30
தனியார் காணியை அரச காணி என அறிவித்து வலி.வடக்கு பிரதேச செயலாளரால் முரணாக வழங்கப்பட்ட வெளியேற்றல் அறிவித்தலை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.
அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின் காணிகளின் உரிமையாளர்களால் தாக்கல் செய் »11

## வன்முறைக்குழு அடாவடி வீடொன்று அடித்துடைப்பு

### நாவற்குழியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாணம் - நாவற்குழிப் பகுதியில் வன்முறைக் குழுவொன்றால் வீடொன்றின் உடைமைகள் அடித்து உடைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
மீற்றர் வட்டியில் இடம்பெற்ற பணக் கொடுக்கல் »11



“அம்மனுக்கே இப்பிடி பவர்கட் விளையாட்டுக் காட்டினவையின்ர பவரை அம்மனும் கட் பண்ணிடுவா கண்டியளோ”
பூச்சந்தி முரளி

நீண்ட நேர மின்தடை

## நேற்று இரவு முழுவதும் இருளில் மூழ்கியது நயினாதீவு!

### தாமதமானது கொடியிறக்கம் மக்கள் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 30
நயினாதீவில் நேற்று இரவு ஏற்பட்ட திடீர் மின்தடையால் அந்தப் பிராந்தியம் முழுவதும் இருளில் மூழ்கியது. இதனால், நயினாதீவில் வசிக்கும் பொதுமக்களும், நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் சென்றிருந்த பக்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பெரும் அவதியை எதிர்கொண்டனர்.
நயினாதீவு ஆலயத் தீர்த்தத் திருவிழாவும், அதைத் தொடர்ந்து கொடியிறக்கமும் நேற்று »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4475 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 36 43 59 75 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1542 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 12 21 25 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0501 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 4 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2581 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 24 30 32 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6233 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 7 9 8 4 5 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2263 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 36 39 52 58 |
| விசேட எழுத்து | F |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0349 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 45 50 |

# பொலிஸ்மா அதிபரிடம் கூறுங்கள் விசேட திட்டத்தில் புதிய வசதிகள்

கொழும்பு, ஜூன் 30

**பொதுமக்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றும் நோக்குடன், 'பொலிஸ்மா அதிபரிடம் கூறுங்கள்' (Tell IGP) என்ற விசேட திட்டம், திட்டமிடப்பட்ட முறையில் மறுசீரமைக்கப்பட்டு, பொதுமக்களின் வசதிக்கு ஏற்ப விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான எப்:யு.வுட்லர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு 2 இல் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்தின் பிரதான காரியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தச் சேவை மையம், 24 மணித்தியாலமும் இயங்கி வருகின்றது. இந்தத் திட்டத்தின் மூலம், நாட்டில் உள்ள பிரஜைகள் மாத்திரமன்றி, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையில் ஏதேனும் ஒரு பொலிஸ் பிரிவின் சேவையைப் பெற விரும்பும் வெளிநாட்டுப் பிரஜைகளும், நிகழ்நிலை மூலமாகத் தங்களின் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

முழுமையாக நிகழ்நிலையில் இயங்கும் இந்தச் சேவையைப் பொதுமக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற முடியும். அதேபோன்று, நாட்டில் உள்ள ஒருவரோ அல்லது வெளிநாட்டுப் பிரஜை ஒருவரோ தங்களின் பெயரைக் குறிப்பிட்டோ அல்லது பெயர் குறிப்பிடாமலோ மிக முக்கியமான மற்றும் இரகசியமான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கமுடியும்.

பிரதானமாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மூலம், நாட்டுக்குள் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் பாதாள உலகக்குழுச்செயற்பாடுகள் குறித்து வழங்கப்படும் தகவல்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கூட்டு எதிரணியுடன் நிச்சயம் இணைவேன்

### ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவா என்பதை தற்போதே கூறமுடியாது. எது எப்படி இருந்தாலும் சரியான நேரத்தில் சரியான இடத்தில் நான் நிற்பேன் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எதிரணியால் முன்னெடுக்கப்படும் கூட்டு நடவடிக்கைகளில் நான் நிச்சயம் பங்கேற்பேன். எனக்கு நபர்கள் முக்கியம் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலம் உள்ளது. எனவே, சரியான நேரத்தில் நான் சரியான இடத்தில் நிற்பேன். ரணிலுடன் நான் வெளியில் இறங்கினேன். அந்த முடிவு சரி என்பதை இன்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கூறிவருகின்றனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பொறுத்தே, ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்தகட்ட அரசியல் பற்றி தீர்மானிக்கப்படும். தற்போதைய சூழ்நிலையில் அவருக்கு நாடாளுமன்றம் வரும் எண்ணம் இல்லை-என்றார். (க-44)

## சிறுவர்களுக்கு சிகரெட் விற்ற வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி நகர்ப் பகுதிகளில் 21 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு சட்டவிரோதமான முறையில் புகைப் பொருள்களை விற்பனை செய்த 13 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கிளிநொச்சி நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்களில், சிறுவர்களை இலக்குவைத்து தொடர்ச்சியாக சிகரெட் மற்றும் பீடி போன்ற புகைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கிளிநொச்சி பொலிஸ் அதிகாரியின் வழிகாட்டலில் விசேட உத்தி ஒன்றை கையாண்ட பொலிஸார், சிறுவன் ஒருவரிடம் பணத்தைக் கொடுத்து வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பி புகைப் பொருட்களை வாங்குமாறு பணித்துள்ளனர். சிறுவன் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று பணத்தைக் கொடுத்து புகைப் பொருள்களைப் பெற்றுக் கொண்ட போது, அங்கிருந்த பொலிஸார் வர்த்தகர்களை கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர்.

நகரின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின் போது, சிறுவர்களுக்கு புகைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 13 வர்த்தக நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறித்த வர்த்தகர்களுக்கு எதிராகவும், 13 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு ஏற்பாடுகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-214,55,113)

## சொத்து விவரம் சமர்ப்பிக்கும் காலக்கெடு இன்றுடன் நிறைவு

கொழும்பு, ஜூன் 30

அரச உயர் அதிகாரிகள் தமது சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இன்றுடன் நிறைவடைவதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது குறித்து ஆணைக்குழு விடுத்துள்ள அறிவித்தலில், குறித்த காலக்கெடுவிற்குள் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அரச அதிகாரிகள் மீது, புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்களையும் https://ald.ciaboc.gov.lk/ என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குப் பின்னர் சொத்துப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. எனவே, தாமதமின்றி உரிய காலத்திற்குள் தங்களின் பிரகடனங்களைச் சமர்ப்பிக்குமாறு அனைத்து அரச உயர் அதிகாரிகளுக்கும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0941 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 1 6 8 9 7 9 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3207 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 09 25 28 77 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 30 34 40 75 |
| வெற்றி வாரம் | 5368 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 1037 |
| வெற்றி இலக்கம் | 05 24 41 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ராசி | கும்பம் |
| வெற்றி இலக்கம் | 06 12 37 49 |
| சீட்டிழுப்பு வாரம் | 4919 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கம் | 17 32 44 67 |
| வெற்றி வாரம் | 2383 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 29.06.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 12 15 54 66 |
| வெற்றி வாரம் | 3033 |

## பல்கலைக்கழக முறைமையை ஆராயும் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் நிலவும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் 2ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ளது. கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில், நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் தற்போது நிலவும் சிக்கல்களை இனங்கண்டு, அவற்றுக்கான உடனடித் தீர்வுகளைப் பெறுதல், கல்வித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வியின் தரம் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதன் ஊடாக, மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல் நாட்டின் உயர்கல்வித் துறையில் புதிய மாற்றங்களை முன்னெடுப்பதற்கான முக்கியமான மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் வருமானம் இவ்வாண்டு வீழ்ச்சியடையும்

## நிதி அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 30**
**2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2026ஆம் ஆண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த அரச வருமானம் வீழ்ச்சியடையும் என நிதி அமைச்சு தெரிவிவித்துள்ளது.**

2025ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி மீள ஆரம்பிக்கப்பட்டதால் ஒருமுறை மாத்திரம் கிடைத்த வரி வருவாய் அதிகரிப்பு, தற்போது சாதாரண நிலைக்குத் திரும்பியமையே இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும். 2022 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியின்போது 8.4 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்த அரச வருமானம், பின்னர் மேற்கொள்ளப்பட்ட வரிநிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் வரி ஏய்ப்புத் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் மேம்படுத்தப்பட்டது. இருப்பினும், மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் பதற்றங்கள், உலகளாவிய வர்த்தகம் மற்றும் எரிசக்திச் சந்தை தடங்கல்கள் காரணமாக, எதிர்காலத்தில் அரச வருமான இலக்குகளைத் தக்க வைப்பது சவாலாக அமையலாம் என நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

# கிணற்றில் தவறி வீழ்ந்து தாய் சாவு, மகள் மாயம்!

கலேவெல, ஜூன் 30
கலேவெல, தன்னகொம்புர பகுதியில் விவசாயக் கிணறு ஒன்றில் தவறி விழுந்து தாயொருவர் உயிரிழந்துள்ளதுடன், அவரது 10 வயது மகள் காணாமல் போயுள்ளார். தலகிரியாகம பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடிக்கச் சென்றமகன் நீண்டநேரமாகியும் வீடுதிரும்பாததால், பதற்றமடைந்த தாய் தனது மகளுடன் நள்ளிரவில் அவரைத் தேடிப் புறப்பட்டுள்ளார். இதன்போது, இருள் காரணமாகப் பாதையருகே இருந்த ஆழமான விவசாயக் கிணற்றுக்குள் இருவரும் எதிர்பாராதவிதமாகத் தவறி விழுந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மீட்புக்குழுவினர் நடத்திய தேடுதலில் தாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், கிணற்றுக்குள் மூழ்கிக் காணாமல்போயுள்ள சிறுமியை மீட்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இச்சம்பவம் குறித்துக் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)



# சிகரெட்டுகளுடன் சீனப் பெண் கைது!

கொழும்பு, ஜூன் 30
கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாகச் சுமார் 42 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரெட்டுகளைச் சட்டவிரோதமாகக் கடத்திவர முயன்ற சீனப் பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
நேற்று அதிகாலை சீனாவின் குன்மிங் நகரிலிருந்து வந்திறங்கிய 40 வயதுடைய சீன வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். விமான நிலையத்தின் 'கிரீன் சேனல்' வழியாகச் சந்தேகத்திற்கிடமான முறையில் வெளியேற முயன்ற இவரின் பயணப்பொதிகளைச் சோதனையிட்டபோது, மறைத்துவைக்கப்பட்டிருந்த 28,000 சிகரெட்டுகள் அடங்கிய 140 கார்ட்டுன்கள் கைப்பற்றப்பட்டன. இச்சம்பவம் குறித்துச் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (எ-இ)

# பாடகர் அசித காலமானார்



கொழும்பு, ஜூன் 30
பிரபல சிங்களப் பாடகர் ருக்மன் அசித தமது 48ஆவது வயதில் நேற்றுக் காலமானார். சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிங்கள இசைத்துறையில் பல உணர்வுபூர்வமான பாடல்களைப் பாடியதன் மூலம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த அவர், மேடை இசைநிகழ்ச்சிகளிலும் தவிர்க்க முடியாத ஒரு சிறந்த பாடகராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மறைவுக்கு இசைத்துறையினரும் ரசிகர்களும் தமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துவருகின்றனர். (எ-இ)

# சிறாரை வேலைக்கமர்த்தினால் இனிக் கடுமையான நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 30
இலங்கையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகளைக் கடுமையாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கான வேலைவாய்ப்புச் சட்டத்தில் விசேட திருத்தங்களை மேற்கொள்ள புதிய சட்ட வரைவு முன்மொழியப்பட்டுள்ளது. இந்தப் புதிய திருத்தங்களின்படி, சிறுவர்களைப் பணியில் அமர்த்துவோருக்கு தற்போது விதிக்கப்படும் 10,000 ரூபா அபராதத்தொகை, 1,00,000 (ஒரு இலட்சம்) ரூபாவரை அதிகரிக்கப்படவுள்ளது. அபராதத்துடன் மாத்திரமன்றி, குற்றவாளிகளுக்கு 12 மாதங்கள் (ஒரு வருடம்) வரையிலான சிறைத் தண்டனையை வழங்கவும் இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குற்றம் நிரூபிக்கப் படும் நபர்களுக்கு அபராதம், சிறைத்தண்டனை அல்லது இவை இரண்டையும் ஒன்றாக விதிக்க நீதிமன்றங்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)




# வெள்ளம் வர முன்னம்...!

பதினேழு வயதிலையே தன்ர தவில் வாசிப்பால பேமஸாகி, அடுத்த 'தட்சணாமூர்த்தியா' வருவான் எண்டெல்லாம் புகழ்மழையில நனைஞ்ச சச்சின் பிழையான முடிவெடுத்து தன்ர உயிரை மாய்ச்சது உங்களுக்குத் தெரியும். அவன்ர வயசவிட கூட வயசுள்ள ஒரு பொம்பிளை தான் கலியாணம் கட்டினதை மறைச்சு, அவனை தன்ர வலையில விழுத்திப்போட்டு பிறகு திடீரெண்டு விலகினதை தாங்கிக் கொள்ளேலாமல் தான், தூக்கு மாட்டின படத்தை அனுப்பிப் போட்டு அந்தச் சின்னப்பெடியன் அவசரப்பட்டு இப்பிடியொரு முடிவை எடுத்திட்டான் எண்டு வீட்டுக்காரர் சொல்லுகினம். நல்லவேளையா சச்சின்ர போன் பாஸ்வேட் வீட்டுக்காரருக்குத் தெரிஞ்சபடியால, ஆர் அவனை ஏமாத்தினது, எப்பவெல்லாம் வீடியோ கோல் கதைச்சது எண்டதையெல்லாம் ஆதாரத்தோட பொலிஸிக்குக் குடுத்திருக்கினம். ஆனால் இப்ப அந்தப் பொம்பிளையை பொலிஸ் அரஸ்ட் பண்ணுமா? கேஸ் போடுமா? எண்டதுதான் பெருங்கேள்வி. ஏனெண்டால் பதினெட்டு வயது தாண்டின பெடியன், வயசு குறைஞ்ச அதுவும் பதினெட்டு வயசுக்குட்பட்ட பெட்டையை லவ் பண்ணி பாலியல் ரீதியாப் பழகினால், உடனையே அது துஷ்பிரயோகம் எண்டு கேஸ் போட்டு, அந்தப் பெடியனையும் சிறைக்குள்ள போடுகினம். ஆனால் அதே நிலைமை பதினேழு வயதுப் பெடியனுக்கு வரேக்க மட்டும், அதைப்பற்றி ஆருமே கண்டுகொள்ளுறேலை. ஆனால் இதுவும் 'சிறுவர் துஷ்பிரயோகம்' எண்ட கணக்குக்குள்ள தான் வரும்.

ஆனா, இஞ்ச இருக்கிற ஆகப்பெரிய கொடுமை என்னவெண்டால் எங்கட ஊர் பெற்றோருக்குப் பெண் பிள்ளைகளைப் பாதுகாக்கத் தெரிஞ்ச அளவுக்கு, ஆண் பிள்ளைகளும் இப்பிடிப் பாலியல் ஆசையளுக்குப் பலியாகலாம் எண்ட தெளிவு இல்லை. வெளிநாடுகளில பெற்றோர் தங்கட பிள்ளைகளின்ர சின்ன மாற்றத்தைக் கூடக் கண்டுபிடிச்சிடுவினம். ஆனா இஞ்ச நாங்க இன்னும் 'அவன் ஆம்பிளப் பிள்ளை, அவனுக்கு என்ன, அவனை அசைக்க ஏலாது' எண்டு அசமந்தமா இருக்கிறதால தான், சச்சின் மாதிரி வாழவேண்டிய, வளரவேண்டிய, மிளிரவேண்டிய பிள்ளையள் எல்லாம் பிழையான முடிவெடுத்துத் தங்கட உயிரை வீணா மாய்க்குதுகள்.

இப்ப கலிகாலம். அதால ஆம்பிளைப் பிள்ளைக்கு ஒரு ஆபத்துமில்லை எண்டு அலட்சியமா இருக்காமல் இனிமேல் உங்கட பொம்பிளைப் பிள்ளையளை மட்டுமில்லாம், ஆம்பிளைப்பிள்ளைகளையும் கொஞ்சம் கண்காணியுங்கோ. இண்டைக்கு இருக்கிற இந்த 'ஸ்மார்ட் போன்' யுகத்தில எந்த ரூபத்தில, எந்த நேரத்தில அவைக்கு ஆபத்து வரும், எப்ப என்ன முடிவை எடுப்பினம் எண்டு ஆருக்கும் தெரியாது. அதால பெற்றார் தங்கட பிள்ளையளை எப்பவும் நிழலாத் தொடரவேணும். பிள்ளையள் தங்கட அறைக் கதவை நாள் முழுக்கப் பூட்டிக்கொண்டு, கனநேரம் போனோடயே குந்தியிருந்தா அப்பிடியே விட்டிடாதேங்கோ. உள்ளுக்குள்ள என்ன நடக்குது எண்டு எட்டிப்பாருங்கோ. சோசியல் மீடியாவுல அவங்கள் யாரோட கதைக்கிறாங்கள், என்ன செய்யிறாங்கள் எண்டு கொஞ்சம் நோட்டம் விடுங்கோ. பிள்ளையளின்ர கையில அளவுக்கு மீறிய காசு புழங்குதா எண்டு பாருங்கோ. அவங்களுக்குத் தேவைக்கு அதிகமான காசைக் குடுத்துக் கெடுக்காதேங்கோ. எல்லாதுக்கும் மேல, ஏலுமட்டும் பிள்ளையளின்ர கையில கனநேரம் போனை வைச்சிருக்க விடாதையுங்கோ. ஒன்லைன் கிளாஸ் எண்டா அது முடிய உடன வாங்கி வைச்சிடுங்கோ. போனுக்குப் பின்னுக்கு ஒளிஞ்சிருக்கிற இப்பிடியான ஆபத்துகளை இனங்கண்டு 'ஆப்பு' வைக்காட்டி, எங்கட சமூகமே சீரழிஞ்சு போயிடும். வெள்ளம் வர முதல் அணைக்கட்ட வேணும். வெள்ளம் தலைக்கு மேல போன பிறகு குய்யோ முய்யோ எண்டு கத்தி ஒரு பிரியோசனமும் இல்லை கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போதைமாத்திரைகளுடன் நிலாவரையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்.ஜூன் 30
போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 20 வயது டைய இளைஞர் ஒருவர் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அச்சு வேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நிலா வரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து 3 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர். (க- 23)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 30
சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருமந் திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-12 எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு தெல்லிப்பழை மாவைகலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நடை பெறவுள்ளது.
சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர் காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், செ.த. குமரனின் ‘கொல்லாமையே சிறந்த அறம்’ எனும் பொருளில் சொற் பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவி லிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 30
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின் 59ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்கா மன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக் களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையு ரையும், க. கைலநாதனின் ‘இந்திராணி மறுதலைப் படலம்’ எனும் விடயப்பொரு ளில் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெ றும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங் கப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (எ-41)

# மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, ஜூன் 30
நாட்டின் சில பகுதி களில் மழை அல் லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவி யல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேல், சப்ரகமுவ மற் றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும். ஊவா மாகாணத்திலும், அம்பாறை மற் றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மாலை 2 மணிக்குப் பின்னர் மழை அல் லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதி களிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும், திருகோ ணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (க-இ)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
சாவகச்சேரி மட்டுவில் அம்பலாந்துறை வேம்படி கந்தசுவாமி திருக் கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.45 மணி முதல் 10.55 மணி வரையுள்ள சுப நேரத்தில் இடம்பெறும். எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கிரியாரம்பமும், 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெய் காப்புச் சாத்துதலும் நடைபெறும். (க)

# மருத்துவர் அருள்மொழிக்கு யாழ்.போதனாவில் கௌரவம்



யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த இரு தசாப்தங்களாகச் சிறுவர் மருத்துவ விசேட மருத்துவ நிபுணராகப் பணியாற்றிய மருத் துவர் அருள்மொழி, சீமாட்டி மருத்துவமனைக்கு இடமாற்றம் பெற் றுள்ள நிலையில், அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். போதனா மருத்துவமனையில் இடம்பெற்றது.
போர் நிலவிய மிகவும் சவாலான காலகட்டத்தில் வளங்களும், மனி தவளமும் குறைவாகவிருந்த நிலையிலும் யாழ்.போதனா மருத்துவ மனையின் சிறுவர் மருத்துவச் சேவையை விரிவுபடுத்தவும், அதன் தரத்தை உயர்த்தவும், புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும், மருத்துவக் கல்வியை வலுப்படுத்தவும் மருத்துவர் அருள்மொழி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். நோயாளிப் பராமரிப் பில் மட்டுமன்றி, சேவைத் திட்டமிடல் பிரிவு மேம்பாடு மற்றும் மருத் துவக்கல்வி ஆகிய துறைகளிலும் இவரது அர்ப்பணிப்பு பெரிதும் மெச்சுதற்குரியது. இவரது நீண்டகால அர்ப்பணிப்பான சேவை கார ணமாக யாழ். போதனா மருத்துவமனையின், சிறுவர் மருத்துவச் சேவை வட மாகாணத்தின் முக்கியமான மூன்றாம் நிலை மருத்துவச் சேவையாக உயர்வடைந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, மருத்துவர் அருள்மொழியின் இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட வெற் றிடத்தை நிரப்ப, புதிய சிறுவர் மருத்துவ விசேட மருத்துவ நிபுணரொ ருவர் விரைவில் தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (க-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப் பதற்கு உகந்த நாள். சிலருக்குத் திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபட வும். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லை கள் நீங்கும். நண்பர்களின் மூலம் முக்கியமான பிரச்சினை ஒன்று நல்லபடி முடிவுக்கு வரும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன் யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்கு வது நல்லது.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தா பம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோ தரவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச் சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டா கும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** உங்கள் யோசனையை வாழ்க்கைத் துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பள்ளி, கல்லூ ரிக்கால நண்பர்களை சந்தித்துப் பேசுவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியஅனுகூலம்உண்டாகும். உங்கள்முயற்சி களுக்கு வாழ்க்கைத்துணை முழு ஒத்துழைப்புத் தருவார்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற் படு வீர்கள். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தா லும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். குடும்ப உறுப்பி னர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகை யில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# இரும்புக்கரமே இதற்குத் தேவை!

கிளிநொச்சியில் பாதசாரி கடவையில், அதிவேக வாகனத்தின் பொறுப்பற்ற தனத்தால் அந்த மாவட்டத்தின் மூத்த கல்வியியலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான பெருமாள் கணேசன் அண்மையில் பலியான சம்பவம், வடக்கின் வீதிப் பாதுகாப்பு குறித்த அச்சத்தை மீண்டும் உச்சத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. இதன் உடனடி விளைவாகக் கிளிநொச்சி பொலிஸார் அதிரடிச் சோதனைகளை நடத்தி, 30-க்கும் மேற்பட்ட அதிவேக மோட்டார் சைக்கிள்களையும், சட்ட விரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 20-க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களையும் பறிமுதல் செய்துள் ளமை தற்காலிக ஆறுதலைத் தந்தாலும், எமது வீதிகளை மரணக் காடாக மாற்றும் 'அதிவேக கலாசாரத்துக்கு' இன்னும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

வடக்கின் புவியியல் மற்றும் வீதிக்கட்டமைப்பு என்பது இன்றைய 'ஜென்ஸீ' தலைமுறையினரிடம் 'அதிவேகப் பந்தயங்களுக்கு 'உகந்தவை அல்ல. குறுகிய வீதிகள், குடியிருப்புப் பகுதிகள் மற்றும் சனநெரிசல் மிக்க சந்திகளைக் கொண்ட எமது பிரதேசத்தின் புவியியலுக்கு முற்றிலும் ஒவ்வாத, அதீத குதிரைத்திறன் கொண்ட சொகுசு மோட்டார் சைக்கிள்களை எமது வீதிகளில் அனுமதிப்பது இத்தகைய விபத்துகளையே விளைவுகளாகத் தரும். எனவே . இத்தகைய அதிவேக வாகனங்களை உடனடியாகப் பறிமுதல் செய்வதே எமது சமூகத்தின் பாதுகாப்புக்குச் சாலச் சிறந்தது. வளர்ந்த வெளிநாடுகளில், குறிப்பாகப் பிரித்தானியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில், ஒரு குறிப்பிட்ட வேக வரம்புக்கு மேல் செல்லக்கூடிய வாகனங்களின் இறக்குமதி,பயன்பாட்டுக்குத் தீவிரக் கட்டுப்பாடுகள் இருப்பதோடு, வீதி விதிகளை மீறும் சொகுசு வாகனங்கள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும் சட்டங்களும் நடைமுறையில் உள்ளன. அதேபோன்றதொரு இரும்புக்கர ஒழுக்கத்தை எமது பொலிஸாரும் கையில் எடுக்க வேண்டும்.

அதிவேகமாக வாகனம் ஓட்டுவோருக்கு வெறும் அபராதங்களுடன் நின்றுவிடாது, அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஆயுட்காலமாக இரத்துச் செய்வதுடன், இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் 'கொலைக்கு நிகரான குற்றமாக'க் கருதிப் பிணையில் வரமுடியாத கடுமையான சிறைத் தண்டனைகள் விதிக்கப்படவேண்டும். அதேவேளை, விபத்துகளைத் தடுப்பதற்கான உட்கட்டமைப்பு மாற்றங்களும் அவசியமானவை. வடக்கின் முக்கியமான வீதி வளைவுகள், சந்திகள் மற்றும் பாடசாலை களுக்கு அருகிலுள்ள பாதசாரிக் கடவைகளில் முறை யான வேகத்தடைகளை நிறுவ வேண்டும். அத்துடன், நவீன எச்சரிக்கை அறிவிப்புப் பலகைகளையும், வேகக் கட்டுப்பாட்டு கேமராக்களையும் பொருத்தி, சட்டத்தை மீறுவோரை உடனுக்குடன் இனங்காணப் பாதுகாப்புத்துறை முன்வரவேண்டும்.

இவ்விடயத்தில் பெற்றோரின் கூட்டுப்பொறுப்பும் மிக முக்கியமானது. இலட்சக்கணக்கில் பணத்தைக் கொட்டி, பிள்ளைகளின் கைகளில் 'மரணப் பிடியை' (அதிவேக சொகுசு வாகனங்களை) வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் , தங்களின் பிள்ளைகள் வீதியில் எப்படிச் செல்கிறார்கள், அவர்களின் வேக மோகம் என்ன என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். வீட்டில் நாம் காட்டும் அலட்சியம், வீதியில் இன்னொருவரின் உயிரைப் பறிக்கும் ஆயுதமாக மாறிவிடுகிறது என்பதைப் பெற்றோர் உணரவேண்டும். வேகத்தால் மரணமே வேகமாக வந்துசேரும் என்ற யதார்த்தத்தை வாகனமோட்டிகளின் மனதில் ஆழப் பதியவைக்கும் வகையிலான தொடர் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் சிவில் அமைப்புகளாலும் பொலிஸாராலும் முன்னெடுக்கப்பட வேண்டும். எமது விழிப்பும், சட்டத்தின் உடும்புப் பிடியும் மட்டுமே எமது வீதிகளில் இனி ஒரு உயிர் பலியாவதைத் தடுத்து நிறுத்தும் கேடயமாகும்.




## பொய்யாமொழி

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்**
**தகுதியான் வென்று விடல்**

**பொருள்:** செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் பொறுத்து வென்றுவிட வேண்டும்.



# தீவிரமாகிவரும் டெங்குப் பரவல்



சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 30

**நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோய்ப்பரவல் தீவிரமடைந்துள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.**


நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இந்த ஆண்டில் இதுவரை 53,159 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.
முந்தைய மாதங்களில் பாதிப்பு 10,000க்கும் குறைவாக இருந்த நிலையில், ஜூன் மாதத்தின் கடந்த 28 நாள்களில் மாத்திரம் 19,318 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில் 52.36 சதவீதமான (27,833) நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். அத்துடன், நாட்டின் 124 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிஅபாய வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. நிலைமையைக் கட்டுப்படுத்த நாடளாவிய ரீதியில் விசேட சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொசனை முன்னிட்டு 1.7 மில். பக்தர்கள்!

அநுராதபுரம், ஜூன் 30
பொசன் பூரணையை முன்னிட்டு இந்த முறை சுமார் 1.5 மில்லியன் முதல் 1.7 மில்லியன் வரையிலான பக்தர்கள் அநுராதபுரத்திற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கான விசேட சமய வழிபாட்டு நிகழ்வுகள் மிஹிந்தலை, அநுராதபுரம் அட்டமஸ்தானம் மற்றும் தந்திரமலை ரஜமகா விகாரை ஆகிய புண்ணியத் தலங்களில் இடம்பெறவுள்ளன. வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 3,500க்கும் மேற்பட்ட பொலிஸார் விசேட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-இ)

# விபத்துகளில் நால்வர் மரணம்!

கொழும்பு, ஜூலை 30
நாடளாவிய ரீதியில் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற நான்கு தனித்தனி விபத்துகளில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
மாத்தளை-குருணாகல் வீதியில் லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் கும்புக்கடவலவைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஹெட்டிபொல வஸ்கமுவ வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மயிலுடன் மோதி, கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதிய விபத்தில் ஹந்துங்கமுவவைச் சேர்ந்த 18 வயது மாணவன் உயிரிழந்துள்ளார். அதேநேரம், பாதெனிய அநுராதபுரம் வீதியில் பழுதடைந்து நின்ற பேருந்தின் நடத்துநர் மற்றும் பயணிகள் மீது முச்சக்கரவண்டி மோதியதில் 65 வயதுடைய பேருந்து நடத்துநர் உயிரிழந்துள்ளார். மேலும், பேராதனை செங்கலடி வீதியில் லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதி 26 வயதுடைய இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். இவ்விபத்துகள் குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)



# வெளிநாட்டு வாக்காளருக்கு டிஜிற்றல் முறை வாக்களிப்பு

கொழும்பு, ஜூலை 30
வெளிநாடுகளில் வாழும் இலங்கை பிரஜைகள் வாக்களிப்பதற்கு வசதியாகப் பல புதிய முன்மொழிவுகள் குறித்து அமைச்சரவை தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். தேர்தல் நாளன்று அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு நேரில் சென்று வாக்களிப்பது அல்லது டிஜிற்றல் முறையிலான வாக்களிப்பைப் பயன்படுத்துவது ஆகிய இரண்டு முக்கியமான முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு, தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து இந்த முன்மொழிவு களைத் தயாரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-இ)



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இனவாதத்தால் பிளவுபடுத்தும் காலம் திரும்பப்போவதில்லை

### அமைச்சர் விஜித தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 30**

**குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்டி நாட்டைப் பிளவுபடுத்திய கடந்த காலம் இனித் திரும்பப்போவதில்லை என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தின் 76ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2024ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் இனவாத மோதல்களுக்கு இடமில்லை. கடந்த காலங்களில் போருக்குப் பின்னரும் திட்டமிட்ட முறையில் இனவாதம் தூண்டப்பட்டதால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. ஆனால் தற்போது அனைத்து இன மக்களும் இணைந்து வாழக்கூடிய ஒழுக்கமான, நாகரிகமான சமூகத்தைக் கட்டியெழுப்பப் புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. அண்மைய வெள்ளப்பெருக்கின்போது முஸ்லிம் இளைஞர்கள் இன, மத வேறுபாடின்றி பதுளை, மல்வானை போன்ற பகுதிகளுக்குச் சென்று ஆற்றிய நிவாரணப் பணிகள், இஸ்லாம் போதிக்கும் உண்மையான சகோதரத்துவத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு- என்றார். (எ-இ)

# கடனுக்கு அரிசி வாங்கும் நிலைக்குத் தள்ளிய அரசு!

### சஜித் சாடுகின்றார்



கொழும்பு, ஜூன் 30

12 இலட்சம் ரூபாவிற்கு 'விட்ஸ்' கார் தருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், இன்று அரச ஊழியர்களைச் சம்பளக் குறைப்பு அடிப்படையில் 20 கிலோ அரிசி வாங்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற நன்கொடை நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளின் சொர்க்கபுரியாக இருந்த நாடு, தற்போது பொய்யின் சொர்க்கபுரியாக மாறியுள்ளது. ஒரு கிலோ நெல்லுக்கு 150 ரூபா தருவதாகக் கூறிவிட்டு, இன்று 75 முதல் 80 ரூபாவிற்கே நெல் கொள்வனவு செய்யப்படுகிறது. இதனால் உரிமைகளுக்காகப் போராடும் விவசாயிகளைக் 'கசிப்புக்காரர்கள்' என அரசாங்கம் முத்திரை குத்துவது கவலையளிக்கிறது.

அரசாங்கம் தனது திறமையின்மையை மறைக்க எதிர்க்கட்சியின் மக்கள் சேவைகள் மீது சேறு பூசுகின்றது. வரலாற்றில் முதன்முறையாக எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நாட்டிற்குச் சேவை செய்தது ஐக்கிய மக்கள் சக்தியே-என்றார். (எ-இ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை அறியும் காலம் நெருங்கிவிட்டது

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களுக்குப் பின்னால் உள்ள பிரதான சூத்திரதாரிகள் சட்டம் வளைக்கப்படாமல் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்வொன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரியைக் கண்டறியும் முயற்சி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. அதேபோல், வரலாற்றில் இல்லாதவாறு சட்டம் அனைவருக்கும் சமமாக நிலைநாட்டப்படுவதால், போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் உள்ள முக்கியமான நபர்களைக் கைது செய்ய முடிந்துள்ளது. இதனால் மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த பழைய அரசியல்வாதிகள் தற்போது திடுக்கிட்டுள்ளனர். சர்வதேச மட்டத்தில் சிவப்பு, நீல பிடியாணை மூலம் வெளிநாடுகளில் மறைந்திருக்கும் குற்றவாளிகளையும் போதைப்பொருள் வியாபாரிகளையும் நாட்டுக்குக் கொண்டுவரக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன்மூலம் மக்கள் நிம்மதியாக வாழும் சூழல் உருவாகி வருகின்றது-என்றார். (எ-இ)

# 'லீசிங் தந்தை' என்ற பெயரை பெறவுள்ள வர்த்தக அமைச்சர்

### அசேல சம்பத் கிண்டல்

கொழும்பு, ஜூன் 30

அரசாங்க ஊழியர்களுக்குத் தவணை முறையில் அரிசி வழங்குவதாகக் கூறும் வர்த்தக அமைச்சர், இலங்கை வரலாற்றிலேயே உணவுப் பயிர்களை லீசிங் முறையில் அறிமுகப்படுத்திய முதலாவது 'லீசிங் தந்தை' என வரலாற்றில் இடம்பிடிக்கப் போகின்றார் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

தேசிய நுகர்வோர் முன்னணி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளுக்காக வீதியில் இறங்கிப் போராடிய தலைவர்களைக் கொண்ட அரசாங்கம், இன்று 20 கிலோ அரிசியைத் தவணை முறையில் வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது வெட்கக்கேடானது.

மிகவும் உற்சாகத்துடன் வாக்கு அளித்து இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்திய அரச ஊழியர்களுக்கு இன்று கிடைத்துள்ள பரிசு இதுதான். தொலைக்காட்சி விவாதமொன்றில் அரிசி நெருக்கடி குறித்துப் பதிலளிக்க முடியாமல் திணறிய பின்னரே அமைச்சர் இந்த லீசிங் திட்டத்தைக் கூறியுள்ளார் என்று குறிப்பிட்டார். (எ-இ)




# முறையான திட்டமிடல் இன்றி புதிய கல்விச் சீர்திருத்தங்கள்

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்கள் எவ்வித முறையான திட்டமிடலும் இன்றி, தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

கல்விச் சீர்திருத்தத்திற்காக 5 குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டாலும், வருடங்கள் கடந்தும் பாடத்திட்டங்கள் இன்னும் மாற்றப்படவே இல்லை. நாட்டில் உள்ள 6,500 பாடசாலைகளில் வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தகவல் உண்மைக்குப் புறம்பானது. 10,100 பாடசாலைகளில், குறைந்தபட்சம் 500 பாடசாலைகளிலாவது இந்த வசதிகள் முழுமைப்படுத் தப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியே. வெறும் வாய்மொழி அறிக்கைகள் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்ய முடியாது. மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு, தற்போதைய நெருக்கடிகளுக்கு முறையான தீர்வு தரக்கூடிய தொலைநோக்குப் பார்வை கொண்ட கல்விச் சீர்திருத்தமே நாட்டிற்கு அவசியம்-என்றார். (எ-இ)

உ
சிவமயம்

**பத்தமேனி அச்சுவேலி**

**ஸ்ரீ வடபத்திர காளி அம்பாள் தேவஸ்தானம்**

**பராபவ வருட மகோற்சவம் - 2026.**

அம்பாளின் 10 வது வருட மகோற்சவம் எதிர்வரும் பாரபவ வருடம் 19.07.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்களும் வழமை போன்று மகோற்சவம் இடம்பெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நன்றி

கம்மாலை வளவு,
பத்தமேனி, அச்சுவேலி.

இவ்வண்ணம்
பொ.செல்வராசா
ஆலய தர்மகர்த்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதைப்பொருள் சூத்திரதாரிகள் வரும் நாள்களில் கைதாவார்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு




**கொழும்பு, ஜூன் 30**
**போதைப்பொருள் பாவனைக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள கடுமையான நடவடிக்கைகளால், தற்போது பாவனையாளர்கள் மட்டுமன்றிப் பிரதான சூத்திரதாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் ஆசீர்வாதத்துடனேயே கடந்த காலங்களில் போதைப்பொருள் வர்த்தகமும் பாதாளக் குழுக்களும் வளர்ந்தன. 2025 இல் 54,000 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்ட நிலையில், 2026 இன் முதல் நான்கு மாதங்களில் அது 226 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.
தற்போது அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட முக்கியமான புள்ளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், வரும் நாள்களில் மேலும் பலர் கைதுசெய்யப்படுவர். கடத்தல்காரர்கள் பற்றிய விவரங்களை வழங்கிய பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு 785 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகை ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
இதுவே உண்மையான 'முறைமை மாற்றம்'-என்றார். (எ-இ)

# கடன்பட்டு தானசாலைகள் தம்மரத்ன தேரர் பாராட்டு!

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்கள் கடன்பட்டாவது தானசாலைகளை நடத்த முன்வருவது, பௌத்த கலாசாரத்தையும் தான தர்மப் பாரம்பரியத்தையும் எவராலும் அழிக்க முடியாது என்பதற்கான சான்றாகும் என மிஹிந்தலை ரஜ மஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாஹாங்குனவெவே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார். மிஹிந்தலையில் ஒலிபெருக்கி மூலம் பக்தர்களுக்கு அறிவித்தல் விடுத்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அரச ஊழியர்களே சம்பளக் கழிப்பு முறையில் அரிசி பெறும் நிலையிலும், பொசன் வாரத்திற்காக நூற்றுக்கும் மேற்பட்ட தான சாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் பாராட்டினார். புனித பூமிக்கு வரும் பக்தர்களிடம் வாகனத் தரிப்பிடம் உள்ளிட்ட இடங்களில் சிலர் சட்டவிரோதமாகப் பணம் பறிக்க முயல்வதாகக் குறிப்பிட்ட தேரர், பற்றுச்சீட்டு இன்றி எவருக்கும் பணம் வழங்கவேண்டாம் என்றும், அத்தகையோரை உடனடியாகப் பொலிஸாரிடம் காட்டிக்கொடுக்கவேண்டும் என்று பக்தர்களைக் கேட்டுக்கொண்டார். (எ-இ)



# ஜனாதிபதி ஆற்றிய உரையால் நீள்கிறது கடவுச்சீட்டு வரிசை!


## திலித் ஜயவீர கூறுகின்றார்

வெலிமடை, ஜூன் 30
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நாடாளுமன்ற உரைகளில் தேசத்தைக் கட்டியெழுப்பும் உள்ளடக்கம் எதுவும் இல்லாததால், அதைக் கேட்கும் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற மீண்டும் கடவுச்சீட்டு வரிசையில் இணைகின்றனர் என்று சர்வசன அதிகாரம் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார். ஊவா பரணகம பகுதியில் நடைபெற்ற கட்சியின் பிரதிநிதிகள் கூட்டத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
ஜனாதிபதி நாடாளுமன்ற மரபுகளை மீறி அவதூறான கருத்துகளைக் கூறி நாடகமாடினாரே தவிர, மின்சாரக் கட்டணம், எரிபொருள் விலை உயர்வு மற்றும் நுகர்வோர் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்துப் பேசவில்லை. நாட்டின் நீதித்துறை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அவர் மௌனம் காக்கிறார். இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு வார்த்தைகூட அவரது உரையில் இல்லை. இதனால் இங்கு எதிர்காலம் இல்லை எனக் கருதும் இளைஞர்கள், நாட்டை விட்டு வெளியேறவே முயல்கின்றனர் -என்றார். (எ-இ)

# டொலர் மாயமான விவகாரத்தில் அரசாங்கம் எதையும் மறைக்காது

## பிரதி அமைச்சர் அனில் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30
அவுஸ்ரேலிய கடன் வழங்குநருக்கு திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர், மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் குறித்து கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு 'பி' அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த மோசடி தொடர்பாக அரசாங்கம் எதனையும் மறைக்கவில்லை. நிதியமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட குழுக்களின் விசாரணைகளைத் தொடர்ந்து குற்றப்புல னாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், உள்ளக விசாரணைகளின் அடிப்படையில் நான்கு அதிகாரிகள் தற்காலிகமாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்"-என்றார். திறைசேரியின் செயலாளர் ஒரு இலங்கைப் பிரஜையே என்றும், அவருக்கு இரட்டைக் குடியுரிமை கிடையாது என்றும் தெளிவுபடுத்திய பிரதி அமைச்சர், சட்டம் தன் கடமையை முறையாகச் செய்யும் என்றும் குறிப்பிட்டார். (எ-இ)




1 ஆம் ஆண்டு நினைவுதினம்



கந்தையா கலாவதி
(ஓய்வு பெற்ற ஆசிரியர்
யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

தோற்றம்
09.02.1960

மறைவு
11.07.2025

ஓராண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எமைவிட்டு நீங்காது.

இன்று (30.06.2026) செவ்வாய்க்கிழமை
அன்னாரது இல்லத்தில் ஆத்மா சாந்தி
பிரர்த்தனை நடைபெற்று தொடர்ந்து மதியபோசன
நிகழ்வும் நடைபெறும். இவ்வண்ணம்
அனைவரையும் அழைக்கின்றோம்.

செட்டி வளவு வீதி,
இணுவில் மேற்கு, இணுவில். N-1 குடும்பத்தினர்


# வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் விசேட சோதனை

அம்பாறை, ஜூலை 30
விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவில் கடந்த சனிக்கிழமை மாலை விசேட போக்குவரத்துச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
பொத்துவில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் 49 அதிகாரிகள் இந்தச் சோதனையில் ஈடுபட்டனர். அபாயகரமான வாகன ஓட்டம் தொடர்பாக 17 வழக்குகளும், சட்ட மீறல்கள் தொடர்பாக 4 வழக்குகளும் பதியப்பட்டன. மேலும், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய 23 பேர் மற்றும் தலைக்கவசமின்றி பயணித்த 76 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 32 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், ஒருவர் கைதும் செய்யப்பட்டுள்ளார். சட்டத்தை மீறுபவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை தொடரும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (எ-இ)


மரண அறிவித்தல்

பிறப்பு
25
05
1936



இறப்பு
29
06
2026

நடராஜா கனகேஸ்வரி
(உரிமையாளர் ரதி வாச், இல.60, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடையிற் சுவாமியார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இல.06, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கனேகேஸ்வரி (உரிமையாளர் ரதி வாச், இல.60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று (29.06.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.
077 855 8845 (நிரோஜன்)
(CS 32073) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் உள்ள தையலகம் ஒன்றிற்கு

1. ஆரி வேக் 2. தையல்

தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 076 435 9276

(CS/61783) J-1

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், நல்லூரிற்கு அருகாமையில் அமைந்துள்ள 2 அறைகள் கொண்ட வீடு தளபாட வசதிகளுடன் மாணவர்கள், தொழில் புரிபவர்கள், நிறுவன ஊழியர்கள் குழுவாகத் தங்குவதற்கு குறுகிய கால அடிப்படையில் வழங்கப்படும்.


தொடர்புகளுக்கு:0759799161/0778864868


# வடக்குக் கடற்பரப்பில் இன்று கடும் காற்று!

வடக்குக் கடற்பரப்பில் இன்று கடும் காற்றுடனான காலநிலை நிலவும் என வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கைவிடுத்துள்ளது. இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பில் கடும் காற்றுடனான காலநிலை நிலவுகின்றது. குறிப்பாக இன்றையதினம் காங்கேசன்துறை முதல் மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் பலத்த காற்று வீசக்கூடும். எனவே, கடற்றொழிலாளர்களும், கடற்படையினரும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 • 04 • 1943

மறைவு 30 • 06 • 2022

### கந்தையா இராசதுரை

(இராசா இரும்பகம் - உரிமையாளர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.30252)(N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 • 08 • 1947



மறைவு 29 • 06 • 2026

### தெட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம்

(Rtd. Senior Investigation Officer)

யாழ்ப்பாணம் கலட்டியை பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம் அவர்கள் நேற்று (29.06.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
87, பொற்பதி வீதி, கொக்குவில்.

(CS/61782) J-1

# மரண அறிவித்தல்



## நடராசா வரதேஸ்வரி (தேவி)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நடராசா வரதேஸ்வரி (தேவி) 26.06.2026 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கமலம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசா அவர்களின் பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்றவர்களான சிவனேசசெல்வராசா, காசிலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மங்களநாயகி, றஜனி, ஜெயந்தி, சுயேந்தி, சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லைநாதன், சிவகுமார், காலஞ்சென்ற திருவருட்செல்வம் (அப்பன்) மற்றும் கேதீஸ்வரன் (சேந்தன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதிகரன், கயல்விழி, ரஜீவன், றதீஸ், நர்த்தனா, நர்மதா, கீர்த்தனா, சஞ்சீவன், பிரசாம், ஜிதுஷா, விஷாளன், சமிரன், மதுமதி, சதுர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹர்னி, மகிழன் ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், பார்வதி, திருச்செல்வம், நாகபூசணி, றதி மற்றும் மலைமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான அமிர்தவள்ளி, நாகேஸ்வரி, சிவசம்பு, பரமலிங்கம் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.07.2026 வியாழக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் கொக்குவில் ஆடியபாதவீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 27.09.1945

மறைவு 26.06.2026

இல.218, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/61780) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மூத்த பத்திரிகையாளரின் இறுதிக்கிரியைகள் இன்று

யாழ்ப்பாணம்,ஜூன் 30
வடமராட்சியின் மூத்த பத்திரிகையாளரில் ஒருவரான ஏ. என். எஸ். திருச்செல்வத்தின் இறுதிக் கிரியை இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊடகப் பணியில் இணைந்த இவர், தினகரன், ஈழநாடு, யாழ். தினக்குரல் பத்திரிகைகளில் கடமையாற்றினார். அத்துடன் பருத்தித்துறை பிரதேசசபை யின் பொதுநூலகராக கடமையாற்றிய இவர் கலாபூஷணம், கலைப்பருதி உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் தனது சேவைக் காலத்தில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், செயலாளராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சுமார் 45 ஆண்டு காலம் செய்தியாளராகப் பணியாற்றிய திருச்செல்வம் கடந்த 5 வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். கடந்த வியாழக்கிழமை தனது 74 வயதில் புலோலி, புற்றளையில் உள்ள இல்லத்தில் காலமானார். அவரது இறுதிக்கிரியைகள் அவரது வீட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்று, ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் உடல் தகனம் செய்யப்படும். (கு-100)

# தலைவர் கிண்ண உதைபந்தாட்டத்தில் வல்வை அணி அரை இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஜூன் 30
40 வயதுக்கு மேற்போட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் அண்ணாசிலையடி அணியை வீழ்த்தி, வல்வை அணி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

வடமராட்சி சிரேஷ்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் க.சொக்கன் (சசிகுமார்) ஞாபகார்த்தமாக அபிராமி இரும்பகத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டத்தின் கடைசிப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் அண்ணாசிலையடி வல்வை அணிகள் மோதின. போட்டியில் வெல்லும் அணி அரை இறுதிக்கு முன்னேறும் என்ற நிலையில், ஆட்டம் விறுவிறுப்பாக இடம்பெற்றது. ஆரம்பம் முதலே இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்திய நிலையில் ஆட்டத்தின் நிறைவில் 3 : 2 என்ற கோல் கணக்கில் வல்வை அணி வெற்றி பெற்றது. இதையடுத்து குழு 2 இல் இருந்து வல்வை அணி இரண்டாவது அணியாக அரை இறுதிக்கு முன்னேறியது. வல்வை அணியின் தாஸ் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டார். இதையடுத்து குழு ஒன்றில் முதலிடம் பெற்ற கொலின்ஸ் அணியுடன், வல்வை அணியும், குழு இரண்டில் முதலிடம் பெற்ற ரேஞ்சர்ஸ் அணியுடன் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் அரை இறுதியில் மோதவுள்ளன. (கு-100)





வியாபாரிகளினதும் வாடிக்கையாளர்களினதும் வசதிக்காக
**இலங்கை வங்கியின் நல்லூர் கிளை**
இன்று புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

**விரைவான மற்றும் நட்புறவான சேவையைப் பெற்றுக்கொள்ள எம்மிடம் வாருங்கள்!**

இல: 652, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொலைபேசி: 021 221 9966 | மின்னஞ்சல்: boc358@boc.lk

1975 BOC
www.boc.lk
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்




# விவசாயிகள் பிரச்சினை காரைநகரில் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 30
காரைநகர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமானச.ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் எல்- நினோ இயற்கைக் காலநிலை மாற்றம், விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகள், வாய்க்கால்கள் புனரமைப்பு, குளங்கள் புனரமைப்பு, கால்நடைகள் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட விவசாயத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. (ச)

# ரூ. 7 கோடி பெறுமதியான போதையுடன் ஐவர் கைது

கொழும்பு,ஜூன் 30
சுமார் 7 கோடியே 22 இலட்சம் ரூபா பெறுமதியான ஹஷீஷ் மற்றும் குஷ் ரக போதைப்பொருள் தொகையை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற ஐந்து பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குகின்றனர்.





இவர்கள் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள், 6 கிலோ 110 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருளையும், 11 கிலோ 62 கிராம் குஷ் ரக போதைப்பொருளையும் 15 கண்ணாடிப் போத்தல்களில் அடைத்து கொண்டுவந்துள்ளனர். சந்தேகநபர்களை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கியூமெடிக்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் முதலுதவி தொடர்பான இருநாள் பயிற்சிநெறி அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
குறித்த பயிற்சி நெறியில் பங்குபற்றிய பிரதேச இளையோருக்கு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணமட்ட பளுதூக்கல் போட்டி; சாதித்தது சண்டிலிப்பாய் இந்து

யாழ்ப்பாணம், ஜூன் 30

மாகாணமட்ட பளுதூக்கல் போட்டியில் சாதித்தது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பல்வேறு வயதுப் பிரிவுகளில் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

மாகாணமட்ட பளுதூக்கும் போட்டி யா/ மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 20 வயதுப் பிரிவு என்.சந்தியா 59 கிலோ எடைப் பிரிவில் தங்கப்பதக்கத்தையும், எஸ். சாருயா 18வயதுப் பிரிவு 40கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும், நாகதீசன் 20 வயதுப் பிரிவு 67கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், ஜே. பிறின்சி 20வயதுப்பிரிவு 45கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (எ-63)

# மரம், மணல் கடத்திய வாகனங்கள் பறிமுதல்

கிளிநொச்சி, ஜூன் 30

விசுவமடுவிலிருந்து அனுமதியின்றி மரங்களை வெட்டி யாழ்ப்பாணம் கொண்டு சென்ற இரண்டு கப்ரக வாகனங்களும், புளியம்பொக்க னையிலிருந்து சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வீதிச்சோதனை யின்போது வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். தொடர்புடைய சந்தேகநபர்களை, தடயப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (க113)





# மாகாணமட்ட விவாதப் போட்டி வட்டு.இந்து தேசிய மட்டத்துக்கு


யாழ்ப்பாணம், ஜூன் 30


மாகாணமட்ட விவாதப் போட்டியில் வெற்றிபெற்று வட்டு. இந்துக் கல்லூரி அணி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. மாகாணமட்ட விவாதப் போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. பல சுற்றுப்போட்டிகள் நடைபெற்ற நிலையில் இறுதிப்போட்டிக்கு வட்டு. இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி தெரிவாகியிருந்தது. பரபரப்பான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற நிலையில் வட்டு. இந்துக் கல்லூரி விவாத அணி யாழ். இந்துக் கல்லூரி விவாத அணியைத் தோற்கடித்து தேசியமட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. வட்டு இந்துக் கல்லூரி விவாத அணி சார்பில் சந்திரமோகன் ஷைந்தவி, அருந்தவன் சரணியா, றுஜிதா ஆனந்தராசா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். கடந்த வாரம் இடம்பெற்ற மாகாணமட்ட அறிவிப்பாளர் போட்டியில் வட்டு. இந்துக் கல்லூரி மாணவி அருந்தவன் சரணியா முதல் நிலையை அடைந்து தேசியமட்ட போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-41-27)

# 'தலைநகர் வன்னி' துடுப்பாட்டத்தில் திருமலை ஸ்பென்ஸ் கழகம் வெற்றி

கிளிநொச்சி, ஜூன் 30

தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழகம் மற்றும் திருகோணமலை ஸ்பென்ஸ்விளையாட்டுக்கழகம் மோதும் தலைநகர் வன்னி துடுப்பாட்டத் தொடரில் திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக்கழகம் 33.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 50 பந்துப் பரிமாற்றங்களில் 166 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழகம் 33.5 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்த நிலையில், 168 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழக வீரர் எம்.நிபான் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த பந்து வீச்சாளராக திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழக வீரர் ஆர்.கஜேந்திரனும், சிறந்த களத்தடுப்பாளராக திருகோணமலை ஸ்பென்ஸ் விளையாட்டுக்கழக வீரர் கே.பானுசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (க-113)



# மாகாண வில்லிசைப் போட்டி யூனியன் கல்லூரி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த வாரம் நடைபெற்ற வடமாகாண தமிழ்த்தின வில்லிசைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவர்கள் குழுவும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் மாணவர்கள் குழுவும் சமநிலைப் பெறுபேற்றைப் பெற்றிருந்தன. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவர்கள் முதலாமிடத்தைப் பெற்றுத் தேசியமட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (எ-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

ஈச்சமோட்டை - கலட்டிப்புலம்

# ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இந்த அலங்கார உற்சவமானது எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி வரை 15 தினங்களுக்கு நடைபெறவுள்து. உற்சவ காலங்களில் மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து நித்திய பூசையுடன் வசந்தமண்டப பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி வரும் நிகழ்வும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-40)

## குறைக்கப்பட்டது...

விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 382 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 95 ஒக்ரேன் பெற்றோல் (495 ரூபா), லங்கா சுப்பர் டீசல் (478 ரூபா) மற்றும் மண்ணெண்ணெய் (285 ரூபா) ஆகியவற்றின் விலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. (அ-ம)

## ஆளுநருக்கு...

வடமாகாண ஆளுநரால் கடந்த 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் வவுனியா மாநகரசபை மேயர் சு.காண்டீபனின் பதவி வறிதாக்கப்பட்டதுடன், அவரது மாநகரசபை உறுப்புரிமையும் பறிக்கப்பட்டிருந்தது. இதனை கண்டித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கத்துக்கு முன்னால் ஆரம்பமான இந்தப் போராட்டம் அங்கிருந்து மன்னார் வீதி வழியாக பேரணியாகச் சென்று காமினி மகாவித்தியாலயம் முன்பாக நிறைவுற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன் வடமாகாண ஆளுநரால் பதவி நீக்கப்பட்ட விடயம் மிகத் தவறானது. ஆளுநர் ஒருதலைப்பட்சமாகவே இந்த முடிவை எடுத்துள்ளார். தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் பதவி நீக்கப்பட்டதை ஜனநாயகப் படுகொலையாகவே நாங்கள் பார்க்கின்றோம். திசைகாட்டி அரசாங்கத்துக்கு விசுவாசம் காட்டி தனது பதவியைத் தக்கவைப்பதற்காகவே ஆளுநர் இத்தகைய முடிவுகளை எடுத்துள்ளார். இந்த முடிவை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம் - என்றனர். (அ-ம-110)

## விகாரையை...

போராட்டம் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட பொதுமக்களுடன் இணைந்து மாதாமாதம் முன்னெடுக்கும் தொடர் போராட்டம் நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்திருந்தது. இதன் தொடர்ச்சியாகவே நேற்றும் போராட்டம் இடம்பெற்றது.

காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தம்பலிங்கம் சுரேஸ், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் பரப்புரைச் செயலாளர் ந.காண்டீபன், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66)

## பலவீனமான...

றும் அம்பலமாகி வருகின்றன. இதை மூடிமறைக்கவே நாட்டில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகின்றது. கடந்த அரசாங்கங்களின் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதைப் போன்று தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகவும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். 12 லட்சம் ரூபாவுக்கு கார் வழங்கப்படும் எனக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர் - என்றார். (அ-ம-இ)

## யாழ்...

தொடர்ந்தே, அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயராக பாப்பரசர் 14ஆம் சிங்கராஜரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 2000ஆம் ஆண்டு கொழும்பு மறை மாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டுப் பல இடங்களிலும் சமய, கல்வி மற்றும் நிர்வாகப் பணியாற்றியுள்ளார். அத்துடன், உரோமில் இறையியல் பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலைப் பட்டத்தையும், கொழும்பில் கல்வியியல் டிப்ளோமாவையும், பிரிட்டனில் கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும், யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி, கலைமாணிப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி அப்போதைய பாப்பரசர் பிரான்சிஸால் கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயராக நியமிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அத்துடன், 2024ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராகவும் நியமனம் பெற்றுப் பணியாற்றி வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## வன்முறைக்குழு...

வாங்கல் காரணமாக இந்தக் குற்றச்செயல் இடம்பெற்றதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

## நேற்று...

நடைபெறவிருந்தன. நேற்றைய தினம் பொசன் விடுமுறை என்பதால் நூற்றுக் கணக்கான சிங்கள மக்களும் நயினாதீவு விகாரைக்குச் சென்றிருந்தனர். இவ்வாறான நிலையிலேயே, நேற்றுமாலை அங்கு திடீர் மின்தடை ஏற்பட்டது. இதனால் பொதுமக்களும் பக்தர்களும் பெரும் அவதியை எதிர்கொண்டனர். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய கொடியிறக்கம் பலமணிநேரம் தாமதமானது.

அத்துடன், நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்றிருந்த சிங்கள மக்களும், சுற்றுலாப் பயணிகளும் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டனர்.

'நயினாதீவில் நேற்று அளவுக்கு அதிகமான மக்கள்கூட்டம் கூடியதால் மின்சார நுகர்வு அதிகரித்தது. அத்தகைய மின்தேவையை நிவர்த்தி செய்யக்கூடிய மின்பிறப்பாக்கி எம்மிடம் இல்லை. ஆதலால், தவிர்க்க முடியாத நிலையில் மின்தடை அமுலாக்கம் செய்யப்பட்டது' என்று மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

'ஆலயத் திருவிழா நிறைவடையும் வரை சீரான மின்விநியோகம் இருக்கும் என்று இலங்கை மின்சாரசபை எமக்கு உறுதியளித்தது. ஆனால் நெருக்கடியான நேரத்தில் ஏற்பட்ட மின்தடையால் சங்கடமான சூழல் ஏற்பட்டது. ஆலய மின்பிறப்பாக்கியும் பழுதடைந்ததால் பக்தர்கள் பெரும் இன்னலை எதிர்கொண்டனர்' என்று ஆலய நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-26-66)

## பிரதேச...

யப்பட்ட மனுவுக்கு அமையவே வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட வெளியேற்றல் அறிவித்தலை ரத்து செய்ததுடன் அவர்களால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வெளியேற்றல் வழக்கைத் தொடர்ந்து கொண்டு நடத்த தேவையில்லை என தடையுத்தரவு பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்செய் ராஜரட்ணம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி மரியதாஸ் யூட் டினேஷ் ஆகியோர் ஆஜராகி இருந்ததுடன் பிரதிவாதிகள் சார்பில் அரச சட்டத்தரணி யோதினி செல்வானந்தன் முன்னிலையானார்.

மனுவின்படி, மனுதாரர்கள் யாழ்ப்பாணம், வயாவிளான், குட்டியாபுலம் பகுதியில் அமைந்துள்ள 2.5 ஏக்கர் காணியின் சட்டபூர்வ உரிமையாளர்கள் என்பதுடன் குறித்த காணியில் இயங்கி வரும் கல் நொறுக்கும் ஆலையை நடத்துவதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியான அனுமதிப்பத்திரங்களும் சட்டபூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு, 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் அது சட்டரீதியாக இயங்கி வருவதாகவும் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில், 2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி அரச காணிகள் சட்டத்தின் பிரிவு 3(1) இன் கீழ், குறித்த காணி அரசுக்குச் சொந்தமானது எனக்கூறி, அதை ஒப்படைக்குமாறு வலி.வடக்கு பிரதேச செயலாளர் சட்ட முரணாக வெளியேற்றல் அறிவித்தல் வழங்கியிருந்தார். அந்த அறிவித்தலைத் தொடர்ந்து, குறித்த காணி அரசுக்குச் சொந்தமானது என்பதை நிரூபிக்கும் ஆவணங்களை வழங்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்த போதிலும், அதற்கான எந்த ஆதாரமும் வழங்கப்படவில்லை என நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து, அளவீட்டுத்திணைக்களம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், யாழ்ப்பாணம் காணிப் பதிவகம் மற்றும் விவசாய, கால்நடை மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களை மனுதாரர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அவற்றில், குறித்த காணி அரசால் சுவீகரிக்கப்படவில்லை என்றும், அது தனியார் காணியாகவே உள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதையடுத்தே, வலி.வடக்கு பிரதேச செயலாளரால் முரணாக வழங்கப்பட்ட வெளியேற்றல் அறிவித்தலை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் 50 பேரில் ஒருவர் போதைக்கு அடிமை!



## இளைஞர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 30**

**இலங்கையில் தற்போது வாழும் மக்களில் ஒவ்வொரு 50 பேரிலும் ஒருவர் ஏதேனும் ஒரு போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளார் என்று மகளிர், சிறுவர் விவகார மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்தப் போதைப்பொருள் அரக்கனுக்கு இரையாவதன் காரணமாக, நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள தாய்மார்களும், பெண்களுமே மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

போதைப்பொருளினால் பிள்ளைகளின் கல்வி முற்றாகச் சீர்குலைந்து, அவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையே இருண்டுபோகிறது. இந்த மாபெரும் பேரழிவிலிருந்து எமது நாட்டை மீட்பதற்கு கூட்டு முயற்சி அவசியமாகும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைச் சட்டத்தின் பிடியில் இருந்து விடுவிப்பதற்காகக் கடந்த காலங்களில் கோடிக்கணக்கில் இலஞ்சம் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக் காலங்களில், சந்தேகநபர்களை ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்வதாகக் கூறி நீண்டகாலம் தடுத்து வைத்து, பின்னர் அவர்களை இரகசியமாக விடுவிப்பதற்காகச் சில அரச இயந்திரங்கள் கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆபத்தான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு எமது அரசாங்கம் தயங்காமல் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தச் செயற்பாட்டில் நாங்கள் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை- என்றார். (ச-இ)

## பெரிய பண்டிவிரிச்சானில் இலவச மருத்துவ முகாம்

மன்னார், ஜூன் 30

மனோன் மணி அறக்கட்டளையின் நிதி அனுசரணையுடன், மன்னார் மாவட்ட மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் விசேட மருத்துவ நிபுணர்களின் பங்குபற்றலுடன் பெரிய பண்டிவிரிச்சான் பிரதேச மருத்துவமனையில், இலவச மருத்துவ முகாம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

மனோன்மணி அறக்கட்டளையின் ஸ்தாபகர் அகஸ்டின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற மருத்துவ முகாமில் தொற்றா நோய்களுக்குரிய குருதிப்பரிசோதனை, பற் சுகாதாரம், பல் சீரமைப்பு, புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள், கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவ ஆலோசனைகள், சத்திரசிகிச்சை தொடர்பான ஆலோசனைகள், பெண் நோயியல் மற்றும் கர்ப்பவதிகளுக்கான ஆலோசனைகள், குழந்தை மருத்துவம் தொடர்பான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பரிசோதனைகளின் பின்னர் உரிய நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன. (க-56)



## டெங்குவை ஒழிக்கும் புகை; சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு

### சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

**டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் புகை விசிறல் செயல்முறை வெற்றிகரமான நடவடிக்கை அல்ல. அதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது என்று சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன தெரிவிக்கையில்,

டெங்குப் பரவலுக்கு மத்தியில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளினால் புகை விசிறல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், டெங்குவை ஒழிப்பதற்கான ஒரே தீர்வு அதுவல்ல. நுளம்பு ஒன்றின் வாழ்க்கை வட்டத்தில் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு மற்றும் முதிர்ந்த நுளம்பு என நான்கு நிலைகள் காணப்படுகின்ற போதிலும், புகைத்தல் மூலம் முதிர்ந்த நுளம்புகள் மட்டுமே அழிக்கப்படுகின்றன.

மேலும், ஒரு சுற்று புகை விசிறல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு 20,000 ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவழிக்கப்படுவதுடன், இந்தப் பூச்சிக்கொல்லி நாசினிகள் காரணமாக நுளம்புகள் மட்டுமன்றி, சூழலுக்கு உகந்த மற்றும் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் தேனீக்கள் மற்றும் தட்டாரப் பூச்சிகள் போன்ற பூச்சியினங்களும் இறப்பதால் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது- என்றார். (ச-இ)



## அரச ஊழியர்கள் வாக்கைப் பெறவே அரசாங்கம் அரிசி விநியோக திட்டம்

### சீலரத்ன தேரர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 30

தேர்தல்களில் அரச ஊழியர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரிசி விநியோகத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகப் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பணக்கார இலங்கையைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சிக்கு வந்துவிட்டு, இன்று அரச ஊழியர்களுக்கு 20 கிலோ அரிசி வழங்குவது பைத்தியக்காரத்தனமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியும், மக்களின் வரிப்பணமும் எங்கே போயின? அரசாங்கத்திற்கு அரச ஊழியர்களின் பசி மட்டுமே தெரிகிறது; ஏழைக் கிராமத்து மக்கள் புண்ணாக்கா உண்கிறார்கள்?" எனக் கேள்வி எழுப்பினார். விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசாங்கம் தனது அகந்தையுடன் செயற்பட்டால், அன்று கோத்தாபய ராஜபக்சவை விரட்டியது போல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை யும் மக்கள் வீட்டிற்கு அனுப்பும் காலம் வெகுதொலைவில் இல்லை என்றும் அவர் எச்சரித்தார். (எ-இ)

## வரிகள் மூலமே நிவாரண உதவி

### திலித் ஜயவீர எம்.பி. கண்டனம்

வரிகளை விதித்து அந்த வரிகள் மூலமே நிவாரணம் வழங்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அஸ்வெசும, முதியோர் கொடுப்பனவு மற்றும் ஆசிரியர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகளும் அரசாங்கத்தால் புதிதாக உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டவை அல்ல. இல்லாத ஒரு நிதியை அல்லது இருந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட பணத்தையே அரசாங்கம் மக்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளது. சுருக்கமாகக் கூறின், உங்களுக்கே வரி விதித்து, அந்தப் பணத்தையே உங்களுக்கே திரும்பக் கொடுத்துள்ளார்கள். நாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின்படி, கடந்த 3 வருடங்களுக்கும் மேலான காலப்பகுதியில் மக்களின் உண்மையான வருமானம் எந்த வகையிலும் அதிகரிக்கவில்லை. - என்றார். (ம)

வேலையாள் தேவை
கொடிகாமத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Waiter (உணவு பரிமாறுபவர்) தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(CS61128) J-1
தொடர்புகளுக்கு:- 077 948 4887



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.